தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

ஆனி 29, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2022

1991 ஜூலை 13, சனிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் 9.30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.''

''பிறர்க்கு நன்மையானவற்றை நாடி, இனிமையுடைய சொற்களைச் சொல்லின், பாவங்கள் தேய்ந்து குறைய, அறம் வளர்ந்து பெருகும்.''

[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. தகவல் கோரல்.

சிவகாசிக்கருகில் மீனம்பட்டியிலுள்ள பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளித்தல் குறித்து.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் காமராஜர் மாவட்டத்தி சிவகாசிக்குப் பக்கத்திலேயிருக்கிற பாறப்பட்டி என்ற ஊரில் பட்டாசுத் தொழிற்சாலையில் வெடிவிபத்து ஏற்பட்டு 36 பேர் மாண்டு போய்விட்டதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. ஒரு தொழிற்சாலையில் இவ்வளவு பெரிய விபத்து ஏற்பட்டு 36 பேர் உயிரிழந்து இருக்கிறார்கள் அல்லது இன்னும் உயிர் இழந்தவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகக் கூடும் என்ற செய்திகள் கூட வந்திருக்கின்றன. இவைகள் எல்லாம் நம்முடைய நெஞ்சை உலுக்கக்கூடிய செய்திகள். அந்தப் பகுதியிலே வெடிமருந்துத் தொழிற்சாலைகள், பட்டாசுத் தொழிற்சாலைகள் நிறைய இருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளைப் பற்றி பலவிதமான புகார்கள் பொதுமக்கள் மத்தியிலேயும் பத்திரிகைகளிலேயும்

பல்வேறு கட்டங்களில் வந்திருக்கின்றன. குறிப்பாக தொழிற் சாலைகள், இயங்குகின்ற விதம் அந்தத் தொழிற்சாலைகளுக்காக கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்ற விதம், அந்தத் தொழிற் சாலைகளிலே பணியாற்றுவதற்காக அமர்த்தப்படுபவர்கள் இவை களைப்பற்றியெல்லாம் நிறைய புகார்கள் பல்வேறு கட்டங்களிலும் வந்திருக்கின்றன. வெடிமருந்து பயன்படுத்துகின்ற தொழிற் சாலைகள் என்றாலே அந்தக் கட்டிடங்களுக்குப் போதுமான பாதுகாப்பு இருக்கவேண்டும். தீ பிடிக்காத கட்டிடங்களில் ஃபயர் ப்ரூப் என்ற லைசன்ஸ் நிச்சயமாக இருக்க வேண்டும். நிச்சயமாக இந்தக் கட்டிடத்தில் தீ பரவாது, இந்தக் கட்டிடத்தில் தீ ஏற்பட்டாலும் அடுத்த கட்டிடங்களுக்குப் பரவாது என்று இருக்கவேண்டும். இந்தக் குறிப்பிட்ட கட்டடத்தைப் பொறுத்த வரையில் 38 அறைகள் இருந்ததாக செய்திகள் கூறுகின்றன. ஒரு அறையில் ஏற்பட்ட வெடிவிபத்து அந்தத் தொழிற்சாலை முழுவதும் சில வினாடிகளுக்குள்ளாகவே பரவி பாதித்து இருப்ப தாக செய்திகள் கூறுகின்றன. ஆகவே, இந்தத் தொழிற்சாலையைக் கட்டுகிற நேரத்தில் அப்படிப்பட்ட உரிமம் (லைசன்ஸ்) பெறப் பட்டதா, ஃபயர் ப்ரூப் லைசன்ஸ் இல்லாமலேயே அந்தத் தொழிற் சாலையைக் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறதா என்பதைக் கண்டறிய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதிகாரிகள் நிச்சயமாக தவறுகள் செய்வதற்கு வழி இருக்கிறது. அந்தப் பகுதியிலே அதிகாரிகள் மீது ஏராளமான புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, அங்கே செத்தவர்களில் பல பேர் குழந்தைகள் என்ற செய்திகள் வந்திருக்கின்றன. அங்கே குழந்தைகளை இந்தத் தொழிலுக்கு நிறைய பயன்படுத்துவதால் அப்படிப் பயன்படுத்தக்கூடாது என்று பல்வேறு கட்டங்களில் தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் போராட்டங்களையும் நடத்தி இருக்கிறார்கள். சிறு சிறு குழந்தைகளை, 8 வயது, 10 வயது குழந்தைகளை தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்து கிறார்கள் என்ற புகார்கள் பல்வேறு கட்டங்களில் வந்திருக் கின்றன. இதுபோன்ற தவறுகள் அங்கே நடைபெற்றிருந்தால் அந்தத் தவறுகள் எதிர்காலத்தில் நடைபெறாமல் தடுத்து நிறுத்தி பார்த்துக் கொள்ள நான் கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்ற தொழிற்சாலைகள் இன்சூரன்ஸ் செய்யப்பட்டிருக்க வேண்டும். இன்சூரன்ஸ் செய்திருக்கிறார்களா என்பதை அங்கேயிருக்கிற லேபர் இன்ஸ்பெக்டர் உறுதி செய்திருக்கிறாரா என்பதை அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசையும் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் ஒரு விஷயத்திலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சிறிது கூட காலம் தாழ்த்தாமல் நேற்று இரவே இறந்து போனவர்களின் குடும்பங்களுக்கு ரூ. 10 ஆயிரமும், காயம் அடைந்தவர்களின் குடும்பங்களுக்கு ரூ. 2,500-ம் அரசின் சார்பிலே வழங்குவதாகவும் அறிவித்திருக்கிறார்கள். இந்த அறிவிப்பை நான் வரவேற்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைச்சர் டாக்டர் அரங்கநாயகம் அவர்களை அங்கே நேரில் சென்று நிலைமைகளைப் பார்த்து வருவதற்கும் அனுப்பியிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டு-கிறேன்.

9-35 மணி

ஆனால் குறிப்பாக அரசாங்கத்தின் அறிவிப்புகள் எப்படி அமல் படுத்தப்படுகின்றன என்பதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். நாம் பல நேரங்களில் 10 ஆயிரம், 20 ஆயிரம் என்று அறிவித்தாலும் கூட உரியவர்களுக்கு அந்தத் தொகை போய்ச் சேர்கிறதா என்பதை கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உரியவர்களுக்கு போய்ச் சேராது. உரிய நேரத்தில் போய்ச் சேராது. உரியவர்கள் போய்க் கேட்டால் நீ தான் வாரிசு என்பதற்கு என்ன அத்தாட்சி, உன்னுடைய மகன் என்பதற்கு என்ன அத்தாட்சி, உன்னுடைய தகப்பன் என்பதற்கு என்ன அத்தாட்சி, அதை வாங்கி வா என்று சொல்வார்கள். இதற்கு பல அலுவலகங்களுக்கும் அவர்கள் ஓடிக்கொண்டிருக்கிற நிலை இருக்கும். உரிய நேரத்தில் பணம் கிடைக்காது. உரிய நேரத்தில் உரியவர்களுக்கு அந்தத் தொகை சேர்வதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே பொருள் பற்றி அவையில் எழுப்ப வேண்டுமென்று என்னுடைய கவனத்திற்கு திருவாளர்கள் எஸ். எஸ். இராமசுப்பு, தே. குமாரதாஸ், செ.கு. தமிழரசன், வி. தண்டாயுதபாணி, ஆர். சிங்காரம், சி. ஆண்டித் தேவர், வெ. பன்னீர்செல்வம் ஆகியோரும் கொண்டு வந்திருக்கிறார்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை இருக்கிறது. ஆகவே சுருக்கமாக முடிக்க வேண்டும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதல்வர் மறைந்த மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சி செய்த போது இதேபோல் ஒரு சூழ்நிலை வந்த நேரத்தில் 1982ஆம் ஆண்டில் அர்பன்சிங் கமிட்டி என்ற ஒரு கமிட்டியை நியமித்து, இந்த ஏழை சிறு வயது குழந்தைகளுக்கு வேண்டிய பரிந்துரைகள் 'சைல்ட் லேபர் ஆக்ட்' என்ற வகையில் என்னென்ன விதங்களில் தர வேண்டுமென்று அறிய ஒரு குழுவை நியமித்தார்கள். அந்தக் குழுவினுடைய பரிந்துரைகள் எந்த

நிலையில் இருக்கின்றன, குழுவின் ரிப்போர்ட் சமர்ப்பிக்கப் பட்டதா, அதன் அடிப்படையிலுள்ள பாதுகாப்புகள் அந்தக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றனவா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆண்டித் தேவர் அவர்களும், திரு. குமாரதாஸ் அவர்களும், திரு. சிங்காரம் அவர்களும், திரு. இராமசுப்பு அவர்களும், திரு. வெ. பன்னீர் செல்வம் அவர்களும், திரு. தமிழரசன் அவர்களும், திரு. தண்டாயுதபாணி அவர்களும் இதே பிரச்சினையைக் கவனத் திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். சிவகாசி அருகில் மீனம்பட்டி என்னுமிடத்தில் நேற்று 'டான் பயர் ஒர்க்ஸ்' எனப்படும் பட்டாசுத் தொழிற்சாலை விபத்தில் 36 பேர் மரணம் அடைந் துள்ளார்கள். மேலும் 58 பேர் படுகாயமுற்று மருத்துவமனை களில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். மாவட்ட அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள், தீயணைப்புப் படையினர் அனைவரையும் விரைந்து சென்று மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. அவர்களும் நிவாரணப்பணி களில் ஈடுபட்டுள்ளார்கள். விபத்து நடந்த செய்தியை அறிந்தவுடன் நான் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் அரங்கநாயகம் அவர்களை உடனடியாக விபத்து நடந்த இடத் திற்குச் சென்று மீட்புப் பணிகளை மேற்பார்வையிட அனுப்பியுள்ளேன். மேலும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து மரணமடைந்தவர்களுடைய குடும்பத்திற்கு தலா ரூபாய் 10,000/- வீதம் நிவாரணம் அளிக்க உத்தரவிட்டுள்ளேன், அதைப்போல விபத்தில் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகிறவர்களுக்கு தலா ரூபாய் 2,500/- வீதம் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மீட்புப் பணியில் தீவிரம் காட்டவும், காயமடைந்தவர்களுக்குத் தேவையான தகுந்த மருத்துவ சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன். இந்த விபத்தினால் ஏற்பட்ட நஷ்டம் ஏறத்தாழ மூன்று இலட்சம் ரூபாய் என்று இதுவரையில் தோராயமாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த விபத்து நடை பெற்றதற்கான காரணம் இன்னும் சரியாகத் தெரியவில்லை. It is under investigation. The cause of accident is under investigation. ஜெனரல் மேனேஜர் ஒரு டீடெய்ல்ட் ரிப்போர்ட் அனுப்ப வேண்டு மென்று பணிக்கப்பட்டுள்ளார். இதற்கிடையில் Industries Commissioner and Dir ctor of Industries and Commerce அளித்துள்ள அறிக்கையின்படி டிபார்ட்மெண்ட்டைச் சார்ந்த இரண்டு மூத்த அதிகாரிகள் திரு. முத்துசாமி, ஐ. ஏ. எஸ்., அடிஷனல் டைரக்டர் அவர்களும், திரு.சி.என். பாலகிருஷ்ணன், ஜாயிண்ட் டைரக்டர்(கெமிக்கல்ஸ்)அவர்களும் நேற்று இரவே புறப் பட்டுச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் ஒரு on the spot assessment

9-40 மணி

செய்து விரிவான அறிக்கை தருமாறு பணிக்கப்பட்டுள்ளார்கள். நிவாரணப் பணிகளுக்குத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து எடுக்குமாறு வருவாய்த்துறை அதிகாரிகளும் பணிக்கப் பட்டுள்ளார்கள். மேற்கண்ட அதிகாரிகள் அவர்களுடைய விரிவான அறிக்கையைக் கொடுத்த பின்னர்தான், மேலும் விவரங்களை அளிக்க முடியும்.

ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள நிவாரணத் தொகை உரியவர்களுக்கு உகந்த நேரத்தில் போய்ச் சேரும்படி பார்த்துக் கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே, தங்கள் உற்றார் உறவினரை இழந்து தவிப்பவர்கள், பல்வேறு அரசு அலுவலகங்களுக்கு அங்கும் இங்கும் அலைந்து ஓட வேண்டிய நிலைமை ஏற்படக்கூடாது என்பதற்காக, இந்த நிவாரணத் தொகை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து அறிவிக்கப்பட்டவுடன், அங்கே உள்ள மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, அங்கிருந்தே தேவையான நிதியை ரிலீஸ் செய்யுமாறு உத்தரவிடப் பட்டுள்ளது. உரியவர்களுக்கு உடனடியாக உதவி போய்ச் சேர்ந்ததா என்பதையும் கண்காணிப்போம்.

உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள், புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட ஒரு கமிட்டியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்தக் கமிட்டியின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்றும் கேட்டார். இந்த விஷயத்தை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்; இன்வெஸ்டிகேஷன் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

ஏற்கெனவே குழந்தைத் தொழிலாளர்களைத் தொழிற்சாலைகளில் பயன்படுத்தக்கூடாது என்பதற்கான சட்டங்கள் இருக்கின்றன. சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆனால் ஆடிப்பாடி, துள்ளித் திரிந்து விளையாட வேண்டிய வயதில், பள்ளிச் சாலைகளுக்குச் செல்ல வேண்டிய வயதில், அந்த இளம் சிறார்கள் தொழிற்சாலைகளுக்குச் சென்று, கடுமையான வேலை செய்யவேண்டி இருக்கின்ற நிலையை எண்ணும்போது, அதை நம்மால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. இத்தகைய குழந்தைத் தொழிலாளர்கள் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்குச் சட்டங்கள் இருந்த போதிலும், நம்முடைய நாட்டின் பொருளாதார நிலைமையினால் இந்தச் சட்டங்களை, இதுவரை நடைமுறைப்படுத்த முடியவில்லை. எத்தனையோ குடும்பங்கள் அந்தக் குழந்தைகள் சம்பாதிக்கும் பணத்தையே நம்பியிருக்கின்றன. இருப்பினும் இந்த அரசின் கொள்கை, குழந்தைத் தொழிலாளர்கள் பயன்படுத்தப்படுவதை அறவே தடுத்து நிறுத்தவேண்டும்

என்பதாகும். எனவே இனிமேல் குழந்தைத் தொழிலாளர்கள் தொழிற்சாலைகளில் பணியாற்றுவதை, பயன்படுத்துவதைத் தடுக்க எல்லாவிதமான நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு குழந்தைகளின் பெற்றோர்களும் சமுதாயத்தின் எல்லாத் தரப்பினரும் அரசுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலுரை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

2. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பெருமக்களின் ஏகோபித்த நல்லாதரவைப் பெற்று, இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களின் நல்லாட்சியை மீண்டும் தமிழகத்தில் உருவாக்கி, அந்நல்லாட்சியின் கொள்கை விளக்கங்களை மேதகு ஆளுநர் அவர்களின் உரையின் மூலம் நாட்டுக்கு வழங்கிடக்கூடிய நல்ல வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ள தமிழகத்து வாக்காளர்களான வணக்கத்திற்குரிய பெரியவர்கள், என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்கள், என் உயிரினும் மேலான புரட்சித் தலைவரின் ரத்தத்தின் ரத்தங்களான கழக உடன்பிறப்புகள் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் எங்கள் தோழமைக் கட்சிகளின் உற்ற நண்பர்கள் ஆகிய அனைவர்க்கும் இப்பேரவையின் மூலம் என் இதயம் கனிந்த நன்றியினைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

9-45 மணி

நான் தீவிர அரசியலில் ஈடுபாடு கொண்ட கால கட்டத்தில் 'இந்த பொம்பளைக்கு என்ன தெரியும்' என ஏளனமாகப் பேசிய சில எல்லாம் தெரிந்த மேதாவிகள் இன்று இந்த அவையில் இல்லாவிட்டாலும் நாட்டிலே நடமாடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் தான் நாங்கள் இந்த ஆளுநர் உரையை, எங்கள் ஆட்சியின் கொள்கைக் குறிப்புகளை வெளியிட்டிருக்கின்றோம். நான் எதுவும் தெரியாத அளவிற்கு அலட்சியப்படுத்தப்பட வேண்டியவள் என கருத்துச் சொல்லிக் கொண்டிருந்த அவர்களை, இன்று இந்த அவைக்கு வரக்கூட முடியாதவர்களாக்கி மக்கள் தீர்ப்பு வழங்கியுள்ளனர். இருந்தாலும் அவர்களோடு இருந்தவர்களான மரியாதைக்குரிய கம்யூனிஸ்டு கட்சிகள் மற்றும் ஜனதா தளக் கட்சியினர் கண்ணியத்திற்குரிய இந்த அவையில் வந்திருந்து தங்கள் கருத்துக்களை ஆளுநர் பேருரையின்மீது வழங்கியுள்ளனர். அவர்கள் அனைவரது பேச்சுக்களின் மூலம் விவரம் தெரிந்து நாட்டு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம் என்ற வகையில்தான் இந்த ஆளுநர் உரை உள்ளது